**பஸ்ஸர பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

------------------------------------

**1. நிதிசார் கூற்றுக்கள்**

**1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மே 08 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டெம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பஸ்ஸர பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) குறித்தொதுக்கிய அடிப்படையிலான உதவியின் கீழ் மீளாய்வாண்டின் போது மாகாண சபையிடமிருந்து 2 வேலைகளுக்கென ரூபா 184,871 பெறப்பட்டிருந்தது. இதில் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 166,384 ஆகும். ஆண்டு முடிவில் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் என்பவற்றின் கீழ் ஒவ்வொன்றும் ரூபா 184,871 கணக்கிலிடப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 166,384 கூடுதலாகவும் கடன்பட்டோர் மீதி ரூபா 184,871 கூடுதலாகவும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பஸ்ஸர சிறுவர் பூங்காவிற்கு விளையாட்டுத் துறை உபகரணங்களைப் பெறுவதற்கான 2013 ஒக்டோபரில் ரூபா 247,695 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு முடிவில் கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 300,000 கணக்கிலிடப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 52,305 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் மீதி ரூபா 4,488,060 இது 7பா 4,473,060 ஆக ரூபா 15,000 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு முடிவிலான ரூபா 134,768 க்கான நீர் மற்றும் பிற களஞ்சியப் பொருட்களது பெறுமதி ரூபா 109,839 ஆகும். இது ரூபா 104,839 ஆக ரூபா 299,929 குறைவாகக் கணக்கிலிடப்படடிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு பெற வேண்டிய மற்றம் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதி முறையே ரூபா 15,799,204 மற்றும் ரூபா 9,089,002 என்பனவாகும்.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

விரிவான பட்டோலை, மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான பொருட் கணிப்புச் சபை அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 20901162 பெறுமதியான ஒன்பது கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் விதி 217 விதி 218 என்பன (நிதியும் நிர்வாகம்) 1988 | சபைக்குச் சொந்தமான / சபையால் பயன்படுத்தப்படும் சகல காணிகளையும் கட்டிடங்களையும் ஆண்டிற்கு ஒரு முறை சரி, பிழை பார்ப்பதற்குத் தலைவர் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 | 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் 2 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 64,496 முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய பஸ்ஸர மாதச் சந்தைக் கடைகள் இருபதினது மாதாந்த வாடகையை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,783,025 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,027,861 ஆகும். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 244,836 தேறிய முறையை காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான நிதிசார் விளைவுகளின் தேறிய குறைவு ரூபா 244,836 ஆகும். இதன் பகுப்பாய்வு பின்வருமாறு.

| மீண்டுவரும் வருவாய் | 2013 | 2012 | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 2,919,897 | 2,850,907 | 68,990 |
| வாடகை | 10,507,086 | 10,265,563 | 241,523 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,492,878 | 1,558,387 | (65,509) |
| சேவைக் கட்டணம் | 652,659 | 575,392 | 77,267 |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 3,878,885 | 1,558,440 | 2,290,445 |
| ஏனைய வருவாய் | 2,571,806 | 5,301,998 | (2,730,190) |
| வருவாய்க்கான உதவி | 16,710,749 | 13,308,223 | 3,402,526 |
| | | | 3,285,050 |
| ஆளுக்குரிய வேதனம் | 23,296,894 | 19,455,197 | (3,861,697) |
| பயணச் செலவினம் | 504,058 | 462,046 | (40,012) |
| வழங்கலும் உபகரணமும் | 2,147,911 | 2,217,990 | 70,079 |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் | 1,269,308 | 1,914,298 | 644,990 |
| போக்குவரத்துப் பாவனைச் சேவைகளும் உதவி உதவு தொகைப் உதவிப் பணம் | 1,268,405 | 1,222,056 | (46,349) |
| ஒய்வூதியம், ஓய்வூதிய வகை | 776,294 | 542,176 | (234,122) |
| பணிக்கொடை | 688,065 | 627,290 | (10,775) |
| நிதி விளைவுகளில் தேறிய குறைவு | | | (3,529,886) |
| | | | 244,836 |

### 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்புச் செயற்திறன்

2013 ஜனவரி 01 இல் உள்ளவாறு தீர்வையும் வரியும், ஏக்கர் வரி, கடை வாடகை என்பவற்றினது நிலுவையை அறவிடுவதிலான முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. ஆண்டிற்கான விலைப் பட்டியல் வழங்கப்பட்ட ஏக்கர் வரி, நீர் வரி, கடை வாடகை என்பவற்றினது அறவீட்டு முன்னேற்றம் 55 சதவீதத்திற்கும் குறைாக இருந்தது.

### 2.3.2 குத்தகை வாடகை

(அ) பஸ்ஸர வாரந்தச் சந்தைகளின் 20 கடைகளது மாதாந்த வாடகை 2005 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2013 முடிவில் உள்ளவாறு அது அமுலாக்கப்பட்டிருந்தது. இதனால் 2005 ஆம் ஆண்டிற்கு முன்னைய குத்தகை வாடகை அறவிடப்பட்டு குறிப்பிடத்தக்க ளவு வருவாயை சபை இழந்திருந்தது.

(ஆ) 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பஸ்ஸர வாராந்தச் சந்தையின் 16 கடைகளது 16 முதல் 108 மாதங்கள் வரையிலான வாடகை நிலுவை ரூபா 550,975 ஆகும். இது அறவிடப்படாதிருந்தது.

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

முன்னைய ஆண்டின் பொருட்டு அறவிடப்பட வேண்டியவ வர்த்தக அனுமதிப்பத்திரத் தாகையான ரூபா 55,500 மீளாய்வாண்டு முடிவுவரை அறவிடப்ப்டாதிருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபைத் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரரிகளிடமிருந்து 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 5,086,965 |
| முத்திரைக் கட்டணம் | 2,335,317 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேறிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் பிரகாரம் சபைக்கரிய பிரதேசத்தில் செயற்பட்டவாறிருக்கும் வியாபாரங்கள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக முறையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்ட நோக்கும். மேலும், 6 வியாபாரங்களது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அவை காலாவதியாகியதன் பின்னதும் புதிய அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் போது இனங்காணப்பட்ட 333 புத்தகக் குறைவு தொடர்பாக தேசிய நூலக மற்றும் சுவடிகள் சேவைச் சபையின் 2004 ஜனவரி 26 ஆந் திகதிய 2004 நூலக 1 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சபை குத்தகை வழங்கிய 3 கடைகளது குத்தகையாளர்கள் தமது மின்கட்டணமாகிய ரூபா 56,626 ஐச் செலுத்தத் தவறியமையால் சபையின் நிதியிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு அது வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு முடிவிலும் குறித்த நபர்களிடமிரந்து இது அறவிடப்படாதிருந்தது.

(ஈ) 1996 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளின் போது சபைக்கு வருவாயகப் பெறப்பட்ட கொடுப்பனவு மறுக்கப்பட்ட 3 காசோலைகளது பெறுமதியாகிய ரூபா 69,212 அறவிடப்படுவதற்கு நிதிப் பிரமாணம் 198 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.2 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

1995 ஆம் ஆண்டில் இராணுவச் செயற்பாடுகளுக்கமைய பெறப்பட்டு 2009 ஆம் ஆண்டில் சபைக்குத் திருப்பி வழங்கப்பட்ட கெப் வண்டி பழுதடைந்த நிலையில் சபை வளாகத்திலிருந்தது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கென சபை தயாரித்த வரவு, செலவுத் திட்டத்திற்கும் உள்ளவாறான வரவுகளுக்குரிய சில வருவாய் மற்றும் செலவின விடயங்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகவே, வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை. என அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவு திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| தீர்வையும் வரியும் | 3,240,000 | 2,919,897 | 320,103 | 9.8 |
| வாடகை | 10,820,000 | 10,507,086 | 1,512,914 | 12.5 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,357,000 | 1,492,878 | 135,878 | 10.0 |
| சேவைக் கட்டணம் | 972,000 | 652,659 | 319,341 | 32.8 |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 4,067,000 | 2,571,885 | 188,115 | 4.6 |
| ஏனைய வருவாய் | 4,491,000 | 2,571,805 | 1,919,195 | 42.7 |
| வருவாய்க்கான உதவி | 14,779,000 | 16,710,749 | 1,931,749 | 13.0 |
| மூலதன உதவி | 4,893,000 | 8,190,991 | 3,247,991 | 67.4 |
| மீண்டுவருஞ் செலவினம் | | | | |
| சம்பளம் | 22,778,000 | 23,296,893 | 518,893 | 2.2 |
| பயணச் செலவினம் | 797,000 | 504,057 | 292,943 | 36.7 |
| வழங்கலும் உபகரணமும் | 2,887,000 | 2,147,911 | 739,089 | 25.6 |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 1,995,000 | 1,269,308 | 725,692 | 36.3 |
| போக்குவரத்துப் பாவனைச் சேவைகளும் | 2,170,000 | 1,268,405 | 901,595 | 41.5 |
| உதவி உதவு தொகைப் உதவிப் பணம் | 1,444,000 | 776,294 | 667,706 | 46.2 |
| ஓய்வூதியம், ஓய்வூதியாளர் பணிக்கொடை | 878,000 | 668,065 | 189,935 | 21.6 |
| மூலதனச் செலவினம் | 1,287,000 | 14,295,545 | 1,435,545 | 11.0 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் மீது சபையின் விசேட வேதனம் தேவைப்படுகின்றது.

(அ) வருவாய் நிர்வாகம்

(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு